1974 மார்ச் 8] [திரு. மணலி சி. கந்தசாமி]

அப்படிப்பட்ட ஒரு பெரியார் காலமானது தமிழ் நாட்டிற்கு வருங்காலத்தில் ஒரு பெரிய நஷ்டம் என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய சார்பிலும், என்னுடைய கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தலைவர் அவர்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மற்றும் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களுடன் என்னுடைய வருத்தத்தையும் இணைத்துக் கொள்கிறேன். இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் ஒரு நிமிடம் எழுந்து மவுனமாக நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் எழுந்து மவுனமாக நிற்க, தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த தலைவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவை இப்போது ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் காலை 10 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை காலை 9.24 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை காலை 10-00 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் மீண்டும் கூடியது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. அரசினர் தீர்மானம் வினா நேரத்தை நிறுத்திவைத்தல் குறித்து.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : Sir, I move –

'That under Rule 22 of the Tamil Nadu Assembly Rules the Question hour be suspended to-day'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வினாக்கள் பட்டியல் நாளைக் காலை எடுத்துக் கொள்ளப் படும்.